அசல் வழக்கு எண். 243/2013 தேதி. 15.11.2023

வா.சா.1- பாலசுப்பிரமணியம்

2,7 முதல் 3 பிரதிவாதி கள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து சின்னயம்பாளையம் கிராமத்தில் உள்ளது. 1ம் பிரதிவாதி ராஜேஷ்வரி மற்றும் அவரது கணவரை எனக்கு தெரியாது. தாவா வழக்கை ராஜேஷ்வரிக்கு எதிராக நான் தாக்கல் செய்தேன். ராஜேஷ்வரி யார் என்று தெரியாமல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்துககளை நான் பச்சையப்பன் பிள்ளையிடம் வாங்கிருந்தேன். அதனை ராஜேஷ்வரியும் வாங்கியதால் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். 2006 ம் வருடம் தாவா சொத்துக்களை நான் கிரையம் பெற்றேன். எனது முதல் விசாரணையில் உள்ள சர்வே எண்கள் சரியானதா என்றால் எனக்கு படிக்க தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எனக்கு எதிராக என்ன சர்வே எண்களில் உள்ள சொத்துக்களில் வழக்கு தாக்கல் செய்தனர் என்று எனக்கு தெரியாது. 2006 ம் வருடம் மொத்தம் 4 ஏக்கர் கிரையம் பெற்றேன். அதன் சர்வே எண்கள் தெரியாது. மேற்படி 4 ஏக்கரும் ஒரே சதுரமாக உள்ளது. அது பல சர்வே எண்களில் உள்ளது. நான் தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்னர் அதற்கான ஆவணங்களை பார்த்தேன். சரியாக இருந்தது- நான் பார்த்த ஆவணங்கள் என்ன ஆவணங்கள் என்று எனக்கு தெரியாது.

2. பச்சையப்பன் பார்த்து சொன்னார். வில்லங்கம் எதுவும் இல்லை என சொன்னார். தாவா சொத்துக்களுக்கான வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் பெற்ற சர்வே எண்களில் ஒரு சர்வே எண்ணில் உள்ள சொத்தை பச்சையப்பன் ஏற்கனவே விற்றுவிட்டார் என்றால் விற்கவில்லை. என்னை பச்சையப்பன் பிள்ளை ஏமாற்றவில்லை. தாவா சொத்துக்கள் மானாவரி நிலம் ஆகும். ராஜேஷ்வரி 1 ஏக்கர் 82 சென்ட் கிரையம் பெற்றுள்ளார். மேற்படி சொத்து எந்த இடத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் மேற்கு பகுதி ராஜேஷ்வரி கிரையம் பெற்ற இடம் என்றால் சரியல்ல. 4 ஏக்கர் நிலத்தை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். நான் தாவா சர்வே எண்களில் உள்ள சொத்துக்களில் கூடுதல் மற்றும் குறைவாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் மொத்தமாக 4 ஏக்கர் கிரையம் பெற்றுள்ளேன். கிரைய பத்திரத்தில் நான்குமால் குறிப்பிட்டு எழுதியுள்ளோமா என்றால் தெரியவில்லை.

3. தாவா சொத்திற்கான புல வரைபடத்தை பார்த்தால் சொத்தின் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2006 கிரைய பத்திரத்தில் பட்டாவின் அடிப்படையில் சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண் தெரியவில்லை. நான் சொல்வது போல் பட்டாவின் அடிப்படையில் சொத்துக்கள் பாத்தியப்பட்டதாக கிரைய பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டாவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் தெரியாது. தாவா சொத்துக்களை நான் கிரையம் வாங்கிய காலத்தில் முத்துப்பிள்ளை பெயரில் பட்டா இருந்ததா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களுக்கு வடக்கே அல்லிமுத்து நிலம் உள்ளது- அல்லி முத்து நிலத்திற்கு நேராக மேல்புறம் உள்ள நிலம் முத்துபிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அது எனது நிலம் ஆகும்.

4. அல்லிமுத்து பச்சையப்பபிள்ளையிடமிருந்து நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். எனக்கு முன்பாக அல்லி முத்து கிரையம் பெற்றார். மேற்படி கிரைய பத்திரத்தை நான் பார்க்கவில்லை. நானும், அல்லிமுத்தும் ஒரே சர்வே எண்களில் சொத்தை கிரையம் பெற்றுள்ளோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்திற்கு மேல்புறம் யார் நிலம் என்று தெரியவில்லை. தாவா சொத்திற்கு தென்புறம் கோவில் உள்ளது. கீழ்புறம் தென்வடல் ரோடு உள்ளது. தாவா சொத்தில் உள்ள பொழியில் மரங்கள் உள்ளது. மேற்படி மரங்கள் அல்லிமுத்திற்கு பாத்தியப்பட்டது. 4 ஏக்கரில் கிழமேல் வரப்பு உள்ளது. தாவா சொத்துக்களில் நெல், பூ மற்றும் காய்கறிகள் பயிரிட்டு வருகிறேன். தாவா சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எத்தனை ஏக்கர் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 82 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.Bala Murugan
**Principal District Munsif,**
**Kulithalai.**